# அறிவித்தல்

## மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
## கிழக்கு மாகாணம்

**கிழக்கு மாகாண, மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக (2023 மற்றும் 2024ம் ஆண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் ஆட்சேர்ப்பு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட வெற்றிடங்களில் மீதி வெற்றிடங்களுக்காக) இலங்கை ஆசிரியர் சேவை 3-I(அ) தரத்துக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை – 2025**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக என்னால் 17.04.2025ம் திகதிய ''தினமின'' மற்றும் ''தினகரன்'' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மற்றும் கிழக்கு மாகாண சபையின் இணையதள முகவரியில் வெளியிடப்பட்ட அறிவித்தல் சம்பந்தமாக.

அதற்கமைய உரிய அறிவித்தலில் ''இணைப்பு 1'' இல் ''பாட இலக்கம் 3'' மற்றும் ''பாட இலக்கம் 15'' இற்கு உரியதாக கீழ்வரும் திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

**திருத்தம்**

| பாட எண் | பாடம் | கல்வித்தகைமைகள் |
|---|---|---|
| 3 | ஆங்கிலம் (English) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஆங்கிலமொழியினை கற்றுள்ள பட்டம் ஒன்று / ஆங்கிலமொழி / ஆங்கில இலக்கியம் /ஆங்கிலமொழியியல் / ஆங்கிலம் தொடர்பில் TESL (Teaching English as Second Language) பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (Credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>அல்லது<br>ஏதேனும் பட்டத்துடன் அரச அங்கீகாரம் பெற்ற ஏதேனும் நிறுவனத்தில் குறைந்தது 02 ஆண்டுகள் கற்ற HNDE (Higher National Diploma in English) உயர் தேசிய டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும். |
| 15 | பொது ஆங்கிலம் (General English) | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஆங்கிலமொழியினை கற்றுள்ள பட்டம் ஒன்று / ஆங்கிலமொழி / ஆங்கில இலக்கியம் /ஆங்கிலமொழியியல் / ஆங்கிலம் தொடர்பில் TESL (Teaching English as Second Language) பாடத்தில் குறைந்தது 30 சராசரி தர புள்ளி (Credits) பெற்றுள்ள இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.<br>அல்லது<br>ஏதேனும் பட்டத்துடன் அரச அங்கீகாரம் பெற்ற ஏதேனும் நிறுவனத்தில் குறைந்தது 02 ஆண்டுகள் கற்ற HNDE (Higher National Diploma in English) உயர் தேசிய டிப்ளோமா பெற்றிருத்தல் வேண்டும். |

teachmore.lk

மேலும், 27/88 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின்படி நியமனம் வழங்கும்போது நிலவுகின்ற பதவி வெற்றிடங்களின் 3% ஐ விசேட தேவைப்பாடுகளுடையவர்களுக்காக (வலது குறைபாடுடைய) ஒதுக்கப்படும். நியமனங்களுக்காக தேர்ந்தெடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் தொடர்புடைய பதவியில் பணியாற்றுவதற்கு தமது விசேட தேவை நிலை (வலது குறைபாட்டு நிலை) தடையொன்றாக இருக்க மாட்டாது என்பதை விசேட மருத்துவச் சோதனையொன்றின் மூலம் உறுதிபடுத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் விசேட தேவையுள்ள விண்ணப்பதாரியொருவர் நியமனம் பெற்றுக் கொள்வதற்காக தகைமை பெற வேண்டுமாயின் எழுத்துமூல பரீட்சையிலும் செய்முறைப் பரீட்சையிலும் குறிப்பிட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

அவ்வாறே விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **26.05.2025**ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக்கொள்வதோடு கிழக்கு மாகாண சபையின் இணையதளத்தில் வெளியிடப்பட்டிருந்த ஆட்சேர்ப்பு அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய நிபந்தனைகள் அவ்வாறே வலுவிலிருக்கும்.

**ஜே. லியாகத் அலி,**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
**12.05.2025**